**தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) திணைக்களத்தால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) அரசாங்க தகவல் திணைக்களத்தில் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 105,651,859 பெறுமதியான தளபாடப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் சகல சொத்துக்களும் கணக்குகளுக்கு கொண்டு வரவேண்டி உள்ளது. | 2017.12.31 வரை கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள், கணக்கு அறிக்கையின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட போதிலும், அந்த பொருட்களை அடையாளப்படுத்துவதற்காக தனித்தனியாக இனங்காண்பதற்கு வசதியீனமாக இருந்தமையால் 2018.12.21 ஆந் திகதி அரச கணக்குகள் திணைக்களத்தில் |

| | | |
|---|---|---|
| | | காணப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பான கூட்டத்தின் போது எமது திணைக்களத்தில் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி அகற்றப்பட்டிருந்ததுடன் தனித்தனியாக இனங்காணக்கூடிய சொத்துக்களின் பெறுமதி மாத்திரம் மீண்டும் சிகாஸ் நிகழச்சித்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2018 இன் நிதிக்கூற்றுக்களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. உரிய சீராக்கங்கள் ACA 6 இல் குறிப்புக்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **இழப்பு தொடர்பான பதிவேடு**<br>2017 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட 03 வாகன விபத்துக்களுக்குரிய இழப்பின் பெறுமதி, பழுதுபார்ப்பதற்கு ஏற்படுகின்ற தொகை, அறவிடக்கூடிய பெறுமதி போன்ற விபரங்கள் இழப்பு தொடர்பான பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் திணைக்களத்தின் இழப்பு மற்றும் நட்டம் பதிவேடு நாளதுவரையாக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் திணைக்களத்தின் இழப்பு தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணிச்செல்லப்பட வேண்டும். | உரிய சலக விபரங்களையும் உள்ளடக்கி இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

**(இ) பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும் கணக்கீட்டு உத்தியோகத்தராலும் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதி நிர்வாகத்திற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும் கணக்கீட்டு உத்தியோகத்தராலும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையில் வினைத்திறன் தொடர்பான முன்னர் காணப்பட்ட மீளாய்வை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று இடம்பெற்றமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை. | திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையில் காணப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது அவதானிக்கப்பட்டு அவற்றை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பிரிவுத் தலைவர்களின் கூட்டம் மற்றும் கணக்காய்வு, முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது உள்ளகக் கட்டுப்பாட்டில் காணப்பட்ட குறைபாடுகளுக்குத் தேவையான தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) உள்ளகக் கணக்காய்வு இலக்குகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துவதற்கான வினைத்திறனான திட்ட முறைமையொன்று உள்ளமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியாகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை. | தற்போது வெற்றிடமாகக் காணப்படுகின்ற உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு அறிவித்திருந்தும் இதுவரையிலும் நியமன அதிகாரியால் நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஈ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காணப்படுகின்றது.

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | அவதானிப்பு சரியானதாகும் |
| (ii) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 06 மாத காலதாமதத்தின் பின்னர் 2018 திசெம்பர் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களை உள்ளடக்குவதற்கு முன்னர் வருடாந்த பொருள் மெய்மையாய்வு செய்ய வேண்டியுள்ளது. | பல்வேறு வசதியீனங்களின் காரணமாக பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்வதற்கு காலதாமதம் எடுக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பொருள் மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிப்பதாக அறியத் தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 51.50 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமையினால் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்தமை | மீண்டும் கூறு விலை கோருவதற்கு ஏற்பட்டமை மற்றும் பெறுகை ஆவணங்கள் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலத்தை விட அதிக காலம் எடுத்தமை, தேறிய |

| | | | |
|---|---|---|---|
| | அந்த நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | | நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்படுவதற்கு காரணமாக இருந்தது. |
| (ஆ) | 05 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த நிதி ஏற்பாட்டிலிருந்து பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 21 சதவீதம் முதல் 82 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்தமை | பணிகளை ஏனைய நிறுவனங்களின் மூலம் நிறைவேற்றுதல், அரசியல் குழப்ப நிலை, மத்திய மட்டத்தில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் காணப்படாமை, பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படாமை, செயற்திட்டம் திருத்தப்படாமை, திறைசேரியிலிருந்து கட்டுநிதி கிடைக்காமை, பொருட்கள் குறித்துரைத்த திகதியில் வழங்குவதற்கு முடியாதிருந்தமை போன்ற காரணங்களால் நிதி ஏற்பாடு 21 சதவீதம் முதல் 82 சதவீதம் வரை சேமிக்கப்பட்டிருந்தது. |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உடன்படல்**

இது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்பட முடியாதிருந்த போதிலும் 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 427,441 இனால் விஞ்சி ரூபா 453,775 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | ஒட்டுமொத்த நிதிஏற்பாட்டையும் விஞ்சாத வகையில் பொறுப்புகள் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டின் போது பொறுப்புக்களுக்கு செலுத்த முடியாமையினால் நிதிஏற்பாட்டை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | திணைக்களத்தாலும் 02 அரச நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 948,750 தொகை 2019 மே 02 ஆந் திகதி வரையிலும் தீர்த்துவைக்கப்படவில்லை. | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | அரச அச்சக திணைக்களத்தில் ரூபா 925,750 தொகையான பட்டியல் மற்றும் அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் ரூபா 23,000 தொகையான பட்டியல்கள் என்பன இதுவரையிலும் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ள ரூபா 33.00 மில்லியன் தொகையான | நிதிப்பிரமாணம் 211(1), 214 மற்றும் 447(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சகல | அவதானிப்பு சரியானது. |

| | | |
|---|---|---|
| பொறுப்புக்களில் மீளாய்வாண்டின் போது ரூபா 20.87 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 12.13 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றிலும் பொறுப்புப் பதிவேட்டிலும் அந்த பொறுப்புக்களின் அளவு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற பொறுப்புக்கள் தொடர்பாக கூற்றில் குறிப்பிடப்படல் வேண்டும். | |

## 2.3 செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கலும், தீர்த்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி 10 நாட்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 09 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 238,990 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதியைத் தீர்த்து வைக்கும் போது 31 நாட்கள் முதல் 83 நாட்கள் வரையிலான வீச்சிலான காலம் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அந்த பிரமாணங்களுக்கு முரணாக செற்பட்ட உத்தியோகத்தர்கள் இருப்பின் அவர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை. | தற்போது நகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்து மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 2.4 வைப்பு மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 7,488,595 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்தமை. | இந்த நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தில் 10 உள்ளக அபிவிருத்தி செயற்திட்டங்களின் செயற்பாடுகளை கட்டியெழுப்புவதற்காக ரூபா 81 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் ஏற்பாடுகளுக்கு இணங்க மதிப்பீடு தயாரித்து வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்தமை | மீண்டும் கூறுவிலை கோரவேண்டி ஏற்பட்டிருந்தமை, சில செயற்திட்டங்கள் நிறுத்தப்பட்டமை அல்லது அமுல்படுத்த முடியாதிருந்தமை, பெறுகை ஆவணங்கள் தயாரிப்பதற்கு அதிகளவான காலம் எடுத்தமை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட காலத்தைவிட அதிக காலம் எடுத்தமை போன்ற காரணங்களால் இந்த பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் பெறுகை நடைமுறைகளின் மூலம் ரூபா 131.22 மில்லியன் தொகையான வழங்கல்களையும், சேவைகளையும் நிறைவேற்றுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், ஆண்டின் போது ரூபா 26.6 மில்லியன் அதாவது நிறைவேற்ற வேண்டிய பெறுகைளில் 20 சதவீத அளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட அனேக செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமை, கூறுவிலை கோரல் மாத்திரம் இடம்பெற்றமை, மீண்டும் கூறுவிலை கோரல், கேள்வி ஆவணங்களைத் தயாரித்து | திணைக்களத்தால் நிதியாண்டுகளின் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | 2018 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையில் ரூபா 69.7 மில்லியன் பெறுமதியான செயற்திட்டங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் / கட்டளை வழங்கப்பட்டுள்ளது. உரிய பொருட்கள் குறித்த காலப்பகுதியில் வழங்குவதற்கு வழங்குனர்கள் முடியாதிருந்தனர். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் மதிப்பீட்டிற்கு அதிக காலம் எடுக்கின்றமை போன்ற காரணங்கள் இதற்கு தாக்கமளித்திருந்தன. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் எந்தவொரு பெறுகையும் அமுல்படுத்தப்பட்ட கால அட்டவணையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் பரீட்சிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 12,725,000 தொகையான சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ளும் 07 பெறுகைகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட திகதியை விட 05 மாதங்கள் முதல் 08 மாதங்கள் வரையிலான வீச்சில் தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.11(அ) வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக வெளிநிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பங்குபற்றச் செய்யப்பட்டமை, மாதிரிகள் தயாரிப்பதற்கு அதிக காலம் எடுத்தமை, கூறுவிலை மதிப்பீட்டிற்கு அதிககாலம் எடுத்தமையின் காரணமாக தாமதம் ஏற்பட்டிருந்தது. |

**3. சொத்துக்கள் முகாமைத்துவம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட பாவனையிலிருந்து அகற்றப்பட வேண்டிய 350 சொத்து விடயங்கள் 2018 ஆம் ஆண்டின் போது அழிவடையச் செய்யப்பட்டதாலும் விற்பனை செய்யப்பட்டதாலும் அகற்றப்பட்ட போதிலும், சொத்துப் பதிவேடுகளில் இருந்தும் கணக்குகளில் இருந்தும் உரிய சொத்துக்களை அகற்றுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2019 மே 02 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அழிக்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் இருந்தும் சொத்துப் பதிவேடுகளில் இருந்தும் அகற்றப்பட வேண்டியுள்ளது. | 2018 ஆம் ஆண்டின் போது அகற்றப்பட்ட பொருட்களுக்காக 2018.12.11 ஆந் திகதி பொருட் பதிவேடுகளில் இருந்து அகற்றும் கட்டளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2015 மார்ச் 25 ஆந் திகதி பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை | உரிய வண்டியை திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்குத் | இந்த வண்டி பழுதுபார்க்கப்பட்டு கையளிக்கப்படுவதாக எழுத்துமூலம் அறிவித்திருந்த போதிலும், |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சிற்கு வழங்கப்பட்ட 2011 ஆம் ஆண்டின் போது குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட டபள்கப் வண்டி 2019 மே 02 கணக்காய்வுத் திகதி வரையிலும் மீண்டும் திணைக்களத்திற்கு பெறப்பட்டிருக்கவில்லை. அந்த வண்டி 2016 திசெம்பர் 26 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்படாமல் தரித்து வைக்கப்பட்டிருந்தன. | தேவையான நடவடிக்கை எடுத்தல். | இதுவரையிலும் ஊடகத்துறை அமைச்சினால் அந்த வண்டி பழுதுபார்க்கப்பட்டு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | திணைக்களத்தின் 19 குழாம் வாகனங்களில் ஓடக்கூடிய நிலையில் காணப்படாத 03 வாகனங்கள் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பழுதுபார்ப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் திணைக்களத்தின் வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தன. | 03 வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது அவ்வாறில்லையாயின் முறையான பிரகாரம் விற்றுத் தீர்த்தல். | இதுவரையிலும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் 02 மாத்திரமேயாகும். அந்த 02 வாகனங்களும் 2019.06.02 ஆந் திகதி ஏல விற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 நட்டம் மற்றும் இழப்பு

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103(1) இன் பிரகாரம் பரிசோதனை நடாத்தி பொறுப்புவாய்ந்த தரப்பினரை நிர்ணயித்து நட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் அதற்காகச் செலுத்த வேண்டிய பணத்தின் அளவைத் தீர்மானித்து அந்தப் பணத்தை அளிப்புச் செய்வதற்காக அவருக்கு விதித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களின் போது வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள், பிணை | வாகன விபத்து தொடர்பாக நி.பி 103(1)(இ), (ஊ), (ஒ), 104 மற்றும் 109 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டம் மற்றும் இழப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்துபவர்களுக்கு உரித்துக்கள் சமர்ப்பித்து நட்டத்தை அறவிடல் கணக்காய்வுத் திகதியான 2019 மே 02 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) முன்னாள் பணிப்பாளர் நாயகத்திற்கு விநியோகிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி மற்றும் மடிகணனி என்பன கணக்காய்வுத் திகதியான 2019 மே 02 ஆந் திகதி வரையிலும், மீண்டும் கையளிக்கப்படாதிருந்ததுடன், அவை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் பற்றாக்குறையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், அந்த பற்றாக்குறைக்காக 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த போதிலும், அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 156(1)(ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய உபகரணங்களை திணைக்களத்திற்கு கையளிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொருட்களை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய 17 வருடங்களை விட பழைய ரூபா 193,040 தொகையான கடன் மீதி கணக்காய்வுத் திகதியான 2019 மே 02 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | நிலுவைக் கடன் மீதியை அறவிடல் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் உரிய ஆலோசனை கிடைத்ததன் பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் நிதிப் பிரமாணம் 133 என்பவற்றின் பிரகாரம் திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டியிருந்த போதிலும், 2019 மே 30 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133 என்பவற்றின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | அவதானிப்பு சரியானதாகும். தற்போது வெற்றிடமாகவுள்ள உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு அறிவிக்கப்பட்ட போதும் இதுவரையிலும் நியமன அதிகாரியால் நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 344 பதவியணியினரில் 109 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்த்தல் நடைமுறைகளின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது மிகையான பதவிகளாயின் திறைசேரியில் விசாரணை செய்து நடவடிக்கை எடுத்தல். | அவதானிப்பு சரியானதாகும். |
| (ஆ) | திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மிகவும் தேவையான மூன்றாம் நிலை மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 16 பதவிகளில் 14 பதவிகள் 2018 திசெம்பர் 31 இல் வெற்றிடமாகக் காணப்பட்டன. வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மக்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக (Enterprise Srilanka) ரூபா 231.5 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்த்தல் நடைமுறைகளின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது மிகை பதவியணியாயின் திறைசேரியில் விசாரித்து நடவடிக்கை எடுத்தல். | அவதானிப்பு சரியானதாகும். மொழி பெயர்ப்பாளர் சேவையிலும் ஏனைய ஒன்றிணைந்த சேவைகளிலும் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை நியமித்து தருமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதும் நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய திணைக்கள ரீதியான பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு, ஆட்சேர்த்தல் நடைமுறையின் பிரகாரம் விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தல், நேர்முகப் பரீட்சை |

போதிலும், அந்த நிகழ்ச்சித்திட்டம் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சிற்கு அனுப்பி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

சபை மற்றும் புள்ளி வழங்கும் நடைமுறைகள் என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும், பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அங்கீகரிப்பதற்கு காலந்தாழ்த்தப்பட்டுள்ளது. சிரேஷ்ட தகவல் உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தை நிரப்புதல் தற்போது சேவையாற்றுகின்ற உத்தியோகத்தரின் பதவி உயர்வு அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் இல்லாமையினால் தற்போது காணப்படுகின்ற ஆட்சேர்த்தல் நடைமுறையைத் திருத்தஞ் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமையினால் அதற்கான செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.